Submitted in the Court of Hon'ble Spl. Judge / CJM, Krishnagiri.

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092364

1. District : கிருஷ்ணகிரி
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No.: 8/AC/19
மு.த.அ. எண்
Date: 04.07.19
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to : 22.06.19 at 11.00hrs
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to : 01.07.19 at 10.30hrs
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04.07.19
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 16.00hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
தளி மின்சார வாரிய அலுவலகம் சுமார் 75km, மேற்கு.
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. K. சங்கர்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : கிருஷ்ணன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 9/15
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம்
தொழில்
(g) Address : [illegible] கிராமம் தேன்கனிக்கோட்டை வட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம்
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. வெங்கடேசன் உதவி பொறியாளர் மின்சாரவாரிய அலுவலகம், தளி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
புகார்தாரரால் தாமதம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Savath 4.7.19.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 4/7/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் GV. KIRUSHNAA RAAJAN
Rank: நிலை Dy. Supdt. of Police ......No. எண் ..........
Krishnagiri VAC.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.07.19 at 18.45 hrs.

GCP-240-34(Type 2) 90,000 Cps

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 8/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

இன்று 04.07.2019ம் தேதி மாலை 16.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம் கீஜன்குப்பம் கிராமத்தை சேர்ந்த சனத்குமார் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் கீஜன்குப்பம் கிராமத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். நான் 10ஆம் வகுப்புவரை தெலுங்கில் படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. ஆனால் தமிழில் பேச தெரியும். நான் விவசாயம் தொழில் செய்துவருகிறேன். எனது அப்பா கிருஷ்ணன் என்பவரின் பெயரில் கீஜன்குப்பம் கிராம சர்வே எண் 176, உட்பிரிவு 1C2 ல் சுமார் 1.60 ஹெக்டேர் விவசாய நிலம் கூட்டாக உள்ளது. அதில் நாங்கள் விவசாயத்திற்காக போர்போட்டோம். அதற்கு E.B. பூந்தோட்ட சர்வீஸ் வாங்கவேண்டி 20.05.2019 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நானும் எனது மாமா கணேஷ்ரெட்டியும் தளி E.B ஆபிசுக்கு சென்று என்னுடைய அப்பா பெயரில் மனு கொடுத்தோம். அப்போது அந்த ஆபிசில் இருந்த A.E. வெங்கடேசன் என்பவரை சந்தித்தோம். அவர் எனது மனுவை வாங்கி பார்த்துவிட்டு ரிஜிஸ்டேசன் பீஸ் கட்டச்சொன்னார். அவர் சொன்னவாறு நான் உடனே அந்த ஆபீசில் இருந்த பில் கவுண்ட்டரில் ரூ.59/- பீஸ் கட்டி, அந்த விவரத்தை A.E. வெங்கடேசன் அவர்களிடம் சொன்னேன். அதற்கு A.E. பீல்டு விசிட் செய்ய பிறகு ஆள் அனுப்புவதாக தெரிவித்து எங்களை வீட்டுக்கு போகச்சொல்லிவிட்டார். அதன்பிறகு நாங்கள் வந்துவிட்டோம். மறுநாள் பகல் சுமார் 12.30 மணியளவில் தளி E.B ஆபிசில் இருந்து C.I. ஜான்சன் என்பவர் எங்க ஊருக்கு வந்து எங்களது நிலத்தை பார்த்துவிட்டு, நீங்கள் A.E யை போய் பாருங்கள் என்று சொன்னார். அவர் சென்னதுபோல் அன்றே மாலை நான் E.B ஆபிசுக்கு சென்று A.E யை பார்க்கும் போது, உங்க பைல் A.D ஆபிசுக்கு போய்விட்டுவரவேண்டும், அதனால் நான் தகவல் சொல்லும்போது வந்தால்போதும் என்று சொன்னார். நான் வந்துவிட்டேன். பிறகு சுமார் 1 மாதம் கழித்து C.I. ஜான்சன் அவர்கள் எனது மாமா கணேஷ்ரெட்டிக்கு தகவல்சொன்னதன்பேரில் நானும் எனது மாமா கணேஷ் ரெட்டியும் தளி E.B

ஆபிசுக்கு சென்று 22.06.2019 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் A.E. வெங்கடேசன் அவர்களை பார்த்தோம். அப்போது A.E. வெங்கடேசன், உங்களுடைய பைல் A.D ஆபிசில் உள்ளது, அங்கிருந்து பைல் வருவதற்கு 15 அல்லது 20 நாளாகும், பைல் வந்தபிறகுதான் உங்களுக்கு சர்வீஸ் கொடுக்கமுடியும். உங்களுக்கு சர்வீஸ் கொடுக்கவேண்டுமானால் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான், தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு, 26.06.2019 ஆம் தேதி C.I ஜான்சன் A.E பீஸ் கட்டச்சொன்னதாக என்னுடைய மாமாவுக்கு தகவல் சொன்னதால், அன்று மதியம் சுமார் 2.00 மணியளவில் தளி E.B ஆபீசுக்கு சென்று அங்கு இருந்தவரிடம் விவரம் தெரிந்து மீட்டர் கொடுப்பதற்கான டெப்பாசிட் பணம் ரூ.6,200/- ஐ கட்டினேன். பின்னர், 01.07.2019 ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு நானும் என் மாமா கணேஷ்ரெட்டியும் தளி E.B. ஆபிசுக்கு சென்று A.E வெங்கடேசன் அவர்களை பார்த்தோம். அப்போது அவர் நான் கேட்ட பணம் ரூ.10,000/-ஐ கொடுத்தால்தான் உங்களுக்கு சர்வீஸ் கொடுக்கமுடியும் என்று உறுதியாக சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர், ரூபாய் 10,000/- கொடுத்தால்தான் சர்வீஸ் கொடுக்க முடியும் என்று முடிவாக சொல்லிவிட்டார். ரூபாய் 10,000/- ஐ ரெடி பண்ணிகிட்டு, பணத்துடன் எப்போது வேண்டுமானாலும் தன்னை வந்து பார்க்குமாறு சொன்னார். அவர் கேட்ட பணத்தை என்னால் இதுநாள்வரை ரெடிபண்ண முடியவில்லை. இன்றுதான் பணம் ரூபாய் 10,000/-ஐ ஏற்பாடு செய்யமுடிந்தது. அவருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து E.B. சர்வீஸ் வாங்க எனக்கு விருப்பமில்லை. A.E வெங்கடேசன் லஞ்சமாக கேட்ட பணம் ரூபாய் 10,000/-த்துடன் நாளை அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, அவர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். படிக்ககேட்டேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம் சனத்குமார். மேற்படி வாய்மொழியாக புகாரைப்பெற்று, அதன் தன்மைப்படி இன்று 04.07.2019ம் தேதி மாலை 18.00 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 8/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 படி வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு

நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

4/7/19

(GV. KIRUCHNAA RAAJAN)
Dy. Supdt. of Police
Krishnagiri VAC.